LouisSaveinDupuisJournalofMultidisciplinaryResearch2024,3: 13-18 Doi.: 10.21839/lsdjmr.2024.v3.133

**Research Article**

# குறுந்தொகைவிளம்பும்இல்லறமும்வாழ்வியலும்

முனைவர் த. தீபா ஏம்.எ, எம்.பில்., பி.எச்.டி., நெட்.,

துறைத்தலைவர், தமிழ்த்துறை

இமாக்குலேட்மகளிர்கல்லூரி, கடலூர்

கைபேசி எண்: 82208 53671

Email:deepavishruth@gmail.com

ஆய்வுவிளக்கம்

நம்பண்பாடுகளுள் தலைச்சிறந்து விளங்குவது இல்லறவாழ்க்கையாகும். இன்று வாழ்க்கைக்கு அர்த்தம் புரியாமலேயே வாழ்ந்து கொண்டிருப் போர்பலர். ஆனால், சங்க இலக்கியங்கள் வாழ்க்கை என்பதற்கு இலக்கணவகுத்து கொடுக்கின்றன. அவை மனிதர்களின் வாழ்வில் களவு, கற்பு என்ற இரண்டிற்கு முக்கியத்துவம்அளிக்கின்றன. களவியலில் மறைந்தொழுகிய காதலர்கள் திருமணம் புரிந்து வாழ்வது கற்பியல் ஆகும் என்கிறது. களவுநெறி திருமணம் ஆக முடியுமாயின் அதனை நன்னெறி என்பர். களவின் முடிவு கற்பென்பது அகத்திணை வலியுறுத்தும் அறங்களுள் தலையானதாகும். சங்க இலக்கியங்கள் எல்லாம் இல்லற வாழ்க்கையை தான் ஏற்ற முடையாதக கூறுகின்றன. அகப்பொருள் பற்றிகூறும் நூல்கள் அனைத்தும் இல்லறத்தை பாராட்டி கூறுவனாகவும் நாட்டில் அமைதியும் அரசியலும் இருந்தால் தான் ஒவ்வொரு குடும்பமும் நன்றாக வாழ முடியும் என்கிறது. பண்டைய தமிழர்கள் இல்வாழ்க்கையை திறமையுடன் நடத்த வேண்டிய முறைப்படி நடத்தி மகிழ்வுடன் வாழ்ந்தனர். அதை காட்டிலும் இனிய வாழ்வு இல்லை என்பதை இவ்ஆய்வானது முன் நிறுத்துகின்றது.

**திறவுச்சொற்கள்**: இல்லறம், வாழ்வியல்இன்பம், களவியல்புணர்ச்சி, கற்புவாழ்க்கை, விருந்தோம்பல், பண்புநலன்கள், பரத்தமைஒழுக்கம்.

## முன்னுரை

சமுதாயத்தின் ஓர் அங்கமாய் இணைந்தும், முரண்பட்டும், மோதியும், இசைந்தும் ஒரு குறிப்பிட்ட வாழ்வியல் சூழலில் மனிதன் வாழ்கின்றான். வாழ்க்கை நடைமுறைகளின் காரணமாக அமையும் உணர்வு நிலையின் ஒரு வெளிப்பாடாக இலக்கியத்தைத் தோற்றுவிக்கிறான்.

அவ்விலக்கியமானது,

அதன்தோற்றம், பொருள், பயன்பாடு ஆகிய மூன்று நிலைகளிலும் மனிதகுலவாழ்வியல் செய்திகள் தொடர்புடையதாக விளங்குகிறது.

அந்நிலையில், “ஓர் இலக்கியமானது வாழ்வியல் செய்திகளைக்

குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தில் தொழில், நம்பிக்கைகள், வீட்டின் அமைப்பு முறை முதலியவற்றைக்கூறுவது மாந்தவியல் போக்கு” என்று கூறுவதன் மூலம் அறியலாம்.

எந்த ஒரு இலக்கியமும் மனிதனுடைய வாழ்வியலைத் தாண்டிப்படைக்கப் படுவதில்லை. அந்த வகையில் குறுந்தொகையில், வாழ்க்கைத்தரம் குறுந்தொகை மக்களின் வாழ்க்கைத்தரம் வெவ்வேறாய் இருந்துள்ளது.

“இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு”1 (குறுந் 283)

“இல்லோன்இன்பம்காமுற்றாஅங்கு”2 (குறுந் 120)

எனவும் இடம் பெறும்வரிகள், இல்லாதோராகியவறியவரைச்சுட்டி, அவர்கள்வாழ்வில் இன்பம் என்பதே கிடையாது என்றும், அவ்வாழ்க்கை இரந்து வாழ்தலினும் கொடிய தெனவும் குறிப்பதிலிருந்து வாழ்வின் அவலத்தையும் அறிய முடிகிறது.

அதே நேரத்தில் மிகவளமையான வாழ்க்கை வாழுந்தோரும், பெரும்பான்மையாக இருந்ததைப் பல பாடல்கள் வழி அறிய முடிகிறது. சான்றாக,

“வெப்பத்தண்ணீர்

சேடச்செப்பிற்பெறீஇயயரோ”3 (குறுந் 279)

என்னும் பாடல் அம்மக்கள் குளிர்காலத்தில் வெந்நீர் பருகியதையும் அதை இன்றை தெர்மோபிளாஸ்டிக் என்னும் அன்றைய சேமச்செப்பில் சேமித்துவைத் திருந்ததையும் காட்டுவதில்ருந்து அவர்கள் வாழ்வின் வளமை வெளிப்படுகிறது.

அதுபோல அவர்கள் தங்கள் ஆடைக்குக் கஞ்சியூட்டி அணிந்து வாழ்ந்ததும், அவதம் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைத் தெரிவிக்கிறது. அதுவருமாறு,

“நீரிற் பிரியாப்பரூ உத்திரி கடுக்கும்” இவ்வாறு வாழ்க்கைத்தரத்தில் ஏற்றத்தாழ் விருப்பினும், அதனை கோட்பாடுகள் அவர்களிடம் உயர்ந்தேயிருந்தது.

வாழ்க்கைக் கோட்பாடுகள்

பண்டைத் தமிழர்கள் தம் வாழ்வில் சில நெறிகளைக் கடைப்பிடித்தனர். அவற்றில் தலையாயது இல்லறந்தான். தன் முன்னோர் செல்வம் எவ்வளவு இருப்பினும், தன் வாழ்விற்குரிய பொருளைத்தானே முயன்று ஈட்டவேண்டும் அது மட்டுமின்றி அதைப்பலரோடும் பகிர்ந்தும் வாழ வேண்டும் என்பதாகும்.

“கடப் பாட்டாளனுடைப் பொருள் போல”4 (குறுந் 143)

எனும் அடிகள் இதற்குச் சான்றாகும். இத்தகைய ஒப்புரவு பண்பு கொண்டிருந்தவர்கள் செய்ந்நன்றி மறவாமையையும் கடைப் பிடித்தார்கள்.

இவ்வாறு சமுதாய அமைப்பு வாழ்க்கைமுறை, வாழ்க்கைத்தரம், வாழ்க்கைக் கோட்பாடுகள் ஆகிய பகுப்புகளில் குறுந்தொகைப் பாடல்களை ஆய்ந்தபொழுது, அச்சமுதாயத்தில் அந்தணர் உயர்ந்தோராய்க்

கருதப்பட்டமையும், வாணிகம் அவர்தம்மையத் தொழிலாய் இருந்தமையும், அதை அவர்கள் கூடிப்புரிந்தமையும், கூடிவிழாக்கள் நிகழ்த்தியமையும், அவர் தம் வழிபாட்டில் இயற்கையும், கொற்றவையும் இடம் பெற்றிருந்தமையும், பறவைகள் போன்றவற்றோடுமேலுலகம் தொடர்பான நம்பிக்கைகளை அவர்கள் கொண்டிருந்தமையும், வறியவர், வளமானவர் எனவேறு பட்ட வாழ்க்கைத்தரம் அவர்களிடம் தென்பட்டமையும் ஆயினும் ஒப்புரவு அறிதல், செய்ந்நன்றி மறவாமை ஆகிய வாழ்க்கைக்கோட்பாடுகள் அவர்கள் எல்லோரும் கடைப்பிடித்தமையும் தெரியவருகின்றன.

**களவு வாழ்வு**

கல்வி, ஒழுக்கம், அன்பு, பண்பு, அழகு முதலிய வற்றாலும் ஒத்ததலைவனும், தலைவியும் தனியிடத்துச் சந்தித்துக் காதல் கொண்டு, தம் முயற்சியாலும், பாங்கன், பாங்கி முதலியோர் உதவியாலும் பிறதறியாமல் தங்கள் காதலைவளர்த்து வருது களவு இதனை,

“உளமலிகாதற்கள வெனப்படுவ

தொரு நான்கு வேதத்திரு நான்கு மன்றலுள்

யாழோர் கூட்டத்தியல் பினதென்ப”5 (நம்பிய. போ. 177) என்று நம்பியகப் பொருள் உரைக்கிறது. தலைவனுக்கும், தலைவிக்கும் உள்ள ஒப்புமைபத்து என்பதை,

“பிறப்பேகுடிமை ஆண்மை ஆண்டோடு

உருவு, நிறுத்தகாமவாயில்,

நிறையே, அருளே, உணர்வொடு திருவென

முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே”6 (தொல் 1269) தொல்காப்பியம் நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

**கற்பு வாழ்வு**

கற்பு என்பதற்கு மறுப்பள்ள தன்மையில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க பொருண்மையை அறுதியிட முடியவில்லை. காலத்துக்குக் காலம் அச்சொல்லுக்கான பொருள் மாற்றம் பெறுகிறது. கற்புக்கு,

“கற்பெனப்படுவது கரணமொடு புணரக்

கொளற்குரிமரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரிமரபினோர்

கொடுப்பக் கொள்வதுவே”7 (தொல் 1495) என்று தொல்காப்பியம் பொருள்வைக்கிறது.

இயற்கையோடு இயைந்த களவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தநம் தலைவனுக்கும், தலைவிக்கும் இவ்வரை முறை எதற்கு? எதார்த்தமான ஒரு சமூகச்சூழலில் பொது நியதி ஒன்று உருவாக்கம் பெறுகிறது என்றால், அந்த உருவாக்கக்காரணத்தை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டியுள்ளது.

மனித இயல்வுகள் மீறப்படுகின்ற பொழுதும் அதனால் ஏற்படுகின்ற பின்விளைவுகள் உணரப்படுகின்ற

பொழுதும் நமக்கு வரை முறைகள் தேவைப்படுகின்றன,

“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம்என்ப”8 (தொல்கற்பியல் 4) இயற்கை சூழ்ந்த களவு வாழ்க்கையில், அக்கால முதிர்ந்த கற்பு வாழ்க்கையில் பொய்யும் வழுவும் தோன்றியது என்பதை உணர்த்துவதற்கு அமைகிறது. களவு வாழ்க்கையில் உண்மையும், கற்பு வாழ்க்கையில் உளம் ஒன்றிய ஒழுக்கமும் மிகமிக முக்கியம். பல நேரங்களில், வைமீறப்பட்டு இருந்ததைக் களவுத் தலைவியும் கற்புத் தலைவியும் புலம்பும்வழி அறியமுடிகிறது.

தலைவனே இரவில் தொடரும் புணர்ச்சியால் தலைவியின் மெய்வேறுபாடு கண்டு பகற்பொழுதில் அலருக்கு வழிவகுக்கும் எனச்சுட்டுகிறாள். இரவுக் குறிவந்து சந்தித்துச் செல்லும் இந்த மனநிலையால் தான் தலைவியைத்திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் கூடத் தலைவனுக்குத் தாமதப்படுகிறது.

இச்சூழலில் தான் தோழியால் தலைவனின் அந்த ஒழுக்கம் கண்டிக்கப் படுகிறது. தலைவியின் உடல் பொலி விழப்பது கண்டு வருந்துகிறான். இந்தப் பொலிவிழப்பு என்பது உடல்வளம் என்ற இருநிலைகளிலும் கண்டுணரப்படுகிறது. சிறந்த கற்புடைய பெண், கடவுளையே பணியவைக்கு மளவிற்குப் பெருமை பெற்றவள்.

“குன்று கெழுநாடன்

வருவதோர் காலையின் முகன்திரியாது

கடவுற் கற்பினவனெதிர் பேணி

மடனவமன்ற நீ யெனக் கடவுடி

துணியில் வாழி………”9 (தொல் 276(1-2)

என்று கணவனைக் கடவுளாக வணங்கினால் மனைவியும் தெய்வமாய் போற்றப்படுவாள் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

## இல்லறம்

இயற்கையைத், தெய்வத்தை வெல்லும் ஆற்றல் கற்புடைய மகளிர்க்கு உண்டு எனும் நம்பிக்கையைமிகுதியும் காணலாம். காதலர்கள் துன்பம் நிறைந்தகளவொழுக்க வாழ்வு முடிந்து, இன்பம் நிறைந்த கற்பொழுக்கவாழ்வு தொடங்கியது. தோழி தன்னைப்பிரிந்து இல்லறம் ஏற்ற தோழியாம் தலைவியைக் காணத்துடித்தாள்.

காதலர்கள் வாழும் ஊருக்குச் சென்றாள். அவர்களின் இல்லறச் சிறப்பைக் கண்டுகளித்தாள். தலைவியின் மேனிப்பொலிவைக் கண்டு வியந்து, தோழி என் காதலர் பொருளுக்காகப் பிரிந்த காலத்தில் இந்த அழகு கெடாமல் எப்படிக் காப்பாற்றினாய்! என்று கேட்டாள். அதற்குத் தலைவி,

“………நாடன்

தொல்லைத் திங்கள் நெடுவெண்ணிலவின்

மணந்தனன்மன் எம்தோளே

இன்றும் முல்லை முகைநாணும்மே”10 (குறுந் 198)

என்று கூறுகிறாள். அதாவது, பல

மாதங்களுக்கு முன்புகளவொழுக்க ஆரம்பத்தில் நெடிய வெண்ணிலவில் அவர் உடலில் இயற்கையாக இருந்த முல்லை மணம் என் தோள்களிலும் பரவியது. அம்மணம் இன்னும் என்தோள்களில் வீசுகிறது. இவ்வரிகள் இதலைவன் அன்று என்பால் கொண்ட அன்பு இன்றும் மாறவில்லை. அதனால், என் அழகுக் கெடாமல்காக்க முடிந்தது" என்று தோழிக்குத்தலைவி கூறுவதாக அமைகிறது.

இங்ஙனம், தோழி சிலநாட்கள் அங்குத்தங்குகிறாள் குhதலர்நடத்தும்இல்லறச்சிறப்பையும்பிரியஅன்பையும்கண்டுவியந்துமகிழ்ந்தாள். செவிலித்தாயும் தலைவியின் இல்லறச்சிறப்பை நேரில்காணவிரும்பி, அவர்கள் இருக்கும் ஊருக்கு வந்தனர் அங்கு சிலநாட்கள் தங்கியிருந்தாள்.

ஒருநாள் மனைவி தன் கணவனுக்கு விருப்பமான மோர்க்குழம்புவைக்க எண்ணினாள். தன்கையாலேயே கணவனுக்கு விருப்பமானதைச்சமைத்துப்படைக்க வேண்டும் என்ற நோக்கினால், வேறொருவர் உதவியையும் நாடாமல் தனது காந்தள் போன்ற மெல்லிய விரல்களால் முற்றிப்புளித்த, கட்டித்தயிரைப்பிசைந்து துழாவினாள். அக்கையை அப்படியே தனது உயர்ந்த ஆடையில் துடைத்துக் கொண்டாள். தாளிக்கும் போது உண்டானபுகை, அவளது முகத்தில் படிந்தது. இங்ஙனம் அவள் சமைத்து முடிப்பதற்குள், வெளியில் சென்ற கணவனும் வந்துவிட்டான். விரைவில் அவனுக்கு உணவு படைக்க வேண்டு மென்று ஆர்வத்தால் ஆடையின் அழுக்கைக் இகழுவாமலும் முகத்தைக் கழுவாமலும் அப்படியே உணவு படைத்தாள். அவனும் அவளுடைய புறத்தோற்றத்தைக்கண்டு வெறுக்காமல், அகத்தே உள்ள அன்பின் சிறப்பை உணர்ந்து, வியந்து மகிழ்ந்து, சுவைத்து உண்டான்.

பிரிவச்சமும் செலவழுங்கலும்

காதலர் இருவரும் கருத்தொருமித்து, ஆதரவுபட்டு, அறம் பலவாற்றி, செல்விருந்தோம்பி, வருவிருந்து பார்த்து, இல்லறத்தை நல்லறமாக இனிது நடத்திவந்தனர். நாளடைவில்கைப்பொருள் கரைந்து பொருள் தட்டுப்பாடுஏற்பட்டது.

தலைவன் பொருளீட்டுவதற்காகக்காடு பல கடந்து, அயல்நாடு செல்ல எண்ணினான். தான்வினை முடித்து மீண்டும் வரும் வரையில், தன் பிரிவைத் தலைவி பொறுத் திருப்பாளோ? என்ற ஐயம் தலைவனுக்கு ஏற்பட்டது. அவன் தன் எண்ணத்தை வெளியிட்ட போது தலைவி கண்ணீர் வடித்தாள். பொருள் தேடப்பிரிந்து செல்வதைத்தலைவன் அந்த நேரத்திற்கு நிறுத்தி விட்டான். இந்நிகழ்ச்சியைத் தலைவன் தோழியிடம் கூறுகிறான்.

“வினைநலம்படீ, வருதும், அவ்வரைந்த

தாங்குதல் ஒல்லுமோ பூங்குழையோய் என

சொல்லா முன்னர் நில்லா ஆகி

நீர்விலங்கு அமுதல் ஆனா

தேர்விலங்கினவால்தெரினவகண்ணே"11 (குறுந் 256)

இப்பாடலைத், தலைவனது கடமையுணர்வையும், தலைவியின் பால் கொண்ட பேரன்பையும் உணர்த்துகிறது. பொருள் வயிற்பிரிவும் கணவனுக்காகத் தலைவியைத் தோழிதேற்றுவிப்பதற்குக் கூறிய செய்தி,

"விணையே ஆடவர்க்கு உயிரேவாள்நுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என

நமக்குரைத்தோரும்தாமே,

அழா அல்தோழி-அழுங்குவர். செலவே"12 (குறுந் 135)

பொருளீட்டும் கடமையே ஆண்களுக்கு உயிர்என்று கூறிய அவரே, தன் ஒளி பொருந்திய நெற்றியையுடைய இல்லறப் பெண்களுக்குக் கணவரே உயிர் எனக் கூறினர். காதலால் உண்ணவிட்டு அவர் பிரிந்து செல்ல மாட்டார். நீ அழாதே என்று தோழி தேற்றுகிறார். இப்பாடல் ஆண்களின் புறக்கடமையையும், அகக்கடமையையும் ஒருங்கே உணர்த்தும் தலைசிறந்த பாடலாக அமைந்துள்ளது. இல்லற வெற்றி இவ்வுலக வாழ்விற்கு இல்லறமே இனியவழி. இல்லற இன்பத்திற்குப் பொருளே துணையாகும். பொருளீட்டும் பொருட்டு நிகழும் பிரிவினால் எழும் துன்பத்தைத் தாங்குவார், இல்லறத்தின்கூறுஈட்டியபொருள் கொண்டுஇன்பம்துய்ப்பதேஇல்லறத்தின்சிறப்பு.

இல்லறம் சிறக்க ஏற்ற வழி இருவரும் தமக்குள் இழந்தும், ஈந்தும் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் எனவரும் கருத்துக்கள் குறுந்தொகை வழி இவ்வியலில் விளக்கப்பெற்றன.

**விருந்தோம்பல்**

தமிழரின் பாரம்பரியப் பண்புகளுள் ஒன்றாகத்திகழ்வது விருந்தோம்பல். தம்வீட்டிற்கு விருந்தினராக வந்தவர்க்கு அவர் மனம் மகிழும் வண்ணம் அமுது படைத்துத்தம் பெருமையை நிலைநாட்டுவது தமிழர் பண்பாகும். தொல்காப்பியர் தம் நூலில், "விருந்தேபுதுமை"13 என்று குறிப்பிட்டுள்ளார். விருந்தோம் பலின் சிறப்பை,

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" 14 (குறுந் 81) என்பார் திருவள்ளுவர். குறுந்தொகையில் புதிய விருந்தினரின் வரவைக்காட்டும் காக்கையின் ஒலியைக் குறித்துப் பாடிய புலவரைப் பண்டையோர் காக்கை பாடினியார் என்றே அழைத்தனர். "விருந்து வரக்கரைந்த காக்கையது பலியே"48 என்பது பாடலின் தொடர். விருந்தினர் வருவதை அறிந்து நன்னிமித்தமாகக்காக்கை கரைந்ததைப் பாடிய புலவர் அப்பெயராலேயே போற்றப்பட்டார். விருந்தோம்பல் என்னும் பண்பு தமிழக மகளிர் வழி வழியாகச் சிறந்து வருகிறது.

**பரத்தமைஒழுக்கம்**

குறுந்தொகையின் வழி பரத்தமை ஒழுகுதல் சமுதாயத்தாரால் ஏற்றுக் கொள்ளப் பட்டமைப்புலனாகிறது. பரத்தமை ஒழுகுதல் இழிவு என்று சமுதாயம் கருதவில்லை. தலைவி மட்டுமே இழி வென்று கருதினாள் இருப்பினும் பரத்தமையிடம் சென்று வந்த தலைவனை ஏற்று, ல்லறம் நடத்தினாள்.

தலைவன் தன் தேரினை அலங்கரித்துச் சென்ற இரவு முழுவதும் பரத்தையரை ஒழுகினான். விடிந்த பின் பரத்தமை ஒழுகிய அடையாளங்களுடன் தன் இல்லத்திற்கு வரும் பொழுது தலைவி, தலைவனின் செயல் மறந்து ஏற்றுக் கொள்கின்றாள்.

**முடிவுரை**

எந்த ஒரு இலக்கியமும் மனிதனுடைய வாழ்வியலைத் தாண்டிப் படைக்கப் படுவதில்லை. அவ்வகையில் குறுந்தொகை இல்லக்கடமை, வாழ்க்கைக்கோட்பாடுகள், களவுவாழ்வு, கற்புவாழ்வு, இல்லறம், பிரிவச்சமும் செலவழுங்கலும், இல்லறவெற்றி, விருந்தோம்பல், பரத்தமை, ஆகிய வாழ்வியல் நெறிகளை நயம் பட உரைக்கிறது. தமிழரின் வாழ்வியல் நெறிகளை உலகமே பின்பற்றுகிறது. ஊலகமக்களின் வாழ்வியல் நெறிகள் சிறந்தோங்க வேண்டுமானால், குறுந்தொகையின் வாழ்வியல் நெறிகள் போற்றப்பட வேண்டும். மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அற நெறிகளைக் குறுந்தொகையின் அகப்பாடல்கள் மௌனமாக எடுத்துக்காட்டுகின்றன.

குறுந்தொகையின் வழி பழந்தமிழர் ஆடை, அணிகலன்கள் ஆகியவற்றின் தனிச் சிறப்புப் பெற்றிருந்தன. காதல் வாழ்வு இளமைக்கு மட்டுமல்லாது முதுமையடைந்து, வாழ்வு முடியும் வரை இன்பமாக வாழ்வதே வாழ்க்கையாகக் காட்டப்படுகிறது.

குறுந்தொகையில் களவு வாழ்வு சீரும் சிறப்புமாக விளங்கியதும் உள்ளத்தால் அன்பு முதலிடம் பெற்ற காதல் வாழ்வைக்காண முடிகிறது. மனிதனின் வாழ்வுணர்வுகளில் கற்பு என்பது பேரிடம் பெறுகின்றமையைக் குறுந்தொகை வழி இவ்வியல் வெளிப்படுத்தியுள்ளது. கற்பு என்னும் ஒழுக்கம் தலைவிக்குப் போன்று தலைவனுக்கும் உரிதானதாகும்.

**பார்வைநூல்**

முனைவர் நாகராசன். வி: குறுந்தொகை மூலமும் உரையும் (2004) பதிப்பு – 2004

நியூ செஞ்சுரிபுக்ஹவுஸ் பி. லிட்,

சென்னை – 98.

சண்முகம்பிள்ளை.ம: சங்கத்தமிழர் வாழ்வியல் (1982) பதிப்பு – 1982 கழகவெளியீடு சென்னை – 17.

சுப்புரெட்டியார் .ந: தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை (1964) பதிப்பு – 1964பழனியப்பா பிரதர்ஸ் சென்னை.

விஜியலட்சுமி. வீ: அற இலக்கியங்களில் இல்லறம் 2021

பதிப்பு – 2021 சித்ரா பதிப்பகம்
சென்னை – 24